Registered as a News Paper in Sri Lanka பக்கங்கள்: 04 விலை ரூபா 3·50

# ஈழநாதம்

THE EELANAATHAM Peoples Daily மக்கள் தினசரி

நாதம் 01 பிரமோதூத ஹூ புரட்டாதி மீ 17 உ புதன்கிழமை (03 - 10 - 1990) ஹிஜ்ரி 1411 ரபி. அப். 13 ஓசை 228

## கிழக்குமேற்கு இணைந்தன

(பேர்லின்)

கிழக்கு ஜேர்மனியும், மேற்கு ஜேர்மனியும் நேற்று நள்ளிரவு 12 மணி முதல் உத்தியோக பூர்வமாக இணைக்கப்பட்டன. கடந்த சில மாதங்களாக நடத்தப்பட்ட பேச்சுவார்த்தைகளின் பெறுபேறாக பேர்லின் சுவர் ஏற்கனவே தகர்க்கப்பட்டமை தெரிந்ததே.

இன்று முதல் ஐக்கிய ஜேர்மனி ஒரே நாடாக விளங்கும். பேர்லின் இதன் தலைநகரமாக விளங்கும். திரு. ஹெல்மட் ஹோல் இதன் அதிபராக விளங்குவார். இந் நிகழ்ச்சியை ஒட்டி சந்தோச சாகரத்தில் மூழ்கியுள்ள ஜேர்மன் (4ஆம் பக்கம் பார்க்க)

### கோட்டை முற்றுகை முறியடிப்பு முயற்சியில் மரணமான

# இராணுவத்தின் சடலங்களை நாங்கள் ஒப்படைக்கத் தயார்!

## விடுதலைப் புலிகள் மக்கள் முன்னணி அறிக்கை

(யாழ்ப்பாணம்)

யாழ். கோட்டை முற்றுகையை முறியடிக்க முற்பட்டு விடுதலைப் புலிகளின் எதிர்த்தாக்குதலுக்குப்பலியான பன்னிரண்டு சிறிலங்கா இராணுவவீரர்களின் சடலங்களை மனிதாபிமான முறையில் அவர்களின் பெற்றோரிடம் ஒப்படைக்கத் தாம் தயாராகவுள்ளதாக விடுதலைப்புலிகள் மக்கள் முன்னணி தலைமைச் செயற்குழு நேற்று விடுத்த அறிக்கை ஒன்றில் தெரிவித்துள்ளது.

யாழ். கோட்டை முற்றுகையை உடைத்து, யாழ். நகரைக் கைப்பற்றி அங்கு இருக்கும் வைத்தியசாலையை சர்வதேச செஞ்சிலுவைச் சங்கத்திடம் வழங்கி அதை இயங்க வைக்கப்போவதாகசிறிலங்கா கூறிய அதேவேளை சிறிலங்காப்படை கண்மூடித்தனமாக வான், கடல், தரை மூலம் யாழ். நகரில் பொதுமக்கள் வாழும் பகுதியிலும் வைத்திய சாலை மீதும் குண்டு வீசித் தாக்கியதில் யாழ். நகரம் முற்றாகஅழிந்துள்ளது. வைத்திய சாலையும் பெருமளவில் சேதமடைந்துள்ளது எனத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

மேலும் அவ்வறிக்கையில் நாலாயிரத்துக்கு மேற்பட்ட (4ஆம் பக்கம் பார்க்க)

## நேற்றும் ஒரு ஆணின் சடலம் கரை ஒதுங்கியது

(விசேட நிருபர்)

நேற்று (02-10-90) நண்பகல் 12 மணியளவில் மற்றொரு அழுகிய ஆணின் சடலம், நேற்று முன்தினம் சடலமொன்று கரை ஒதுங்கிய அதே இடத்தில் கரை ஒதுங்கியது.

இந்தச்சடலம் அடையாளம் காணப்படாமலே யாழ். கடற்கரைவீதி ஓரமாகத் தகனம் செய்யப்பட்டது. (21)

## யாழ். ஆஸ்பத்திரியை வைத்திய குழு பார்வையிட்டது

(யாழ்ப்பாணம்)

சிறிலங்கா முப்படைத் தாக்குதல்களாலும் பலத்த சேதத்திற்குள்ளாகிய யாழ். போதனா மருத்துவமனையை நேற்று வைத்திய அதிகாரிகள் குழு ஒன்று பார்வையிட்டது.

தற்போது மானிப்பாயில் இயங்கிவரும் போதனா வைத்தியசாலையை மீண்டும் பழைய இடத்தில் இயங்க வைப்பதற்கான முன் ஏற்பாடாகவே இவர்கள் பார்வையிட்டனர். (க)

## அக்கரைப்பற்று 40ஆம் கட்டை; 4சடலங்கள் கரை ஒதுங்கின

(அக்கரைப்பற்று)

அக்கரைப்பற்று 40ஆம் கட்டை கடற்பகுதியில் நான்கு ஆண்களின் சடலங்கள் கடந்த ஞாயிற்றுக்கிழமை கரை ஒதுங்கியுள்ளன. இப்பகுதியில் சிறிலங்காவின் விசேட அதிரடிப்படை முகாம் அமைந்திருப்பதும், சடலம் காணப்பட்ட பகுதி இம் முகாமின் பின்பகுதி என்பதும் குறிப்பிடத்தக்கது. (க)

## கடலில் மிதந்து வந்த சாக்கினுள் பத்து மனிதத் தலைகள்

(அக்கரைப்பற்று)

அம்பாறை மாவட்டத்திலுள்ள அக்கரைப்பற்று, தம்பிலுவில், திருக்கோவில், வீரமுனைப் பகுதிகளில் தினமும் தமிழ்ச் சமூகத்தைச் சேர்ந்த ஆண்கள் பாதுகாப்புப் படையினரால் கைது செய்யப்பட்டு வருகின்றனர்; இவ்வாறு கைது செய்யப்பட்டவர்கள் பற்றிய தகவலேதும் அறியக் கிடைப்பதில்லைஎன்றமுறைப்பாடுகள் பரவலாக எழுப்பப்பட்டு வருகிறது.

இதே வேளையில் கடந்த பத்து தினங்களுக்கு முன்னர் அக்கரைப்பற்று 40ஆம் கட்டை என்னுமிடத்திலுள்ள விசேட அதிரடிப்படையினரின் முகாமிற்கு பின்புறமாக கடலில் மிதந்து வந்த சாக்கொன்றில் 10 மனிதத் தலைகள் கிடக்கக் காணப்பட்டது. ஆண்களின் தலைகளே என அடையாளம் காணப்பட்ட மேற்படி தலைகள் இனம் (4 ஆம் பக்கம் பார்க்க)

## இந்து முஸ்லிம் கலவரங்களை ஏற்படுத்த சிறிலங்கா அரசு முயற்சி

### டைம்ஸ் ஒவ் இந்தியா குற்றச்சாட்டு

(டில்லி)

இலங்கை அரசாங்கமானது வடக்குக் கிழக்குப் பிரதேசங்களில் வாழும் முஸ்லிம்களும், இந்துக்களும் ஒன்றுபட்டு வாழாமல் இருப்பதற்கான தந்திரங்களை கையாளுகிறது என இந்தியாவில் இருந்து வெளியாகும் ''ரைம்ஸ் ஒவ் இந்தியா'' தனது ஆசிரியர் தலையகத்தில் கூறியுள்ளது.

இலங்கையின் வடக்குக் கிழக்குப்பகுதியில் தனக்கெனஒரு தனியான நர்வாக கவுன்சில் அமையவேண்டும் என இலங்கைத் தமிழ் முஸ்லிம்கள் கோரிவருகின்றனர். இக்கோரிக்கையானது இலங்கை அரசாங்கத்தினாலேயே முஸ்லிம்களுக்கு வற்புறுத்தப்பட்டு வருகிறது என்றும் அப்பத்திரிகை குறிப்பிட்டுள்ளது.

கணிசமான எண்ணிக்கையில் தமிழ் இந்துக்கள் வாழும் வடக்குக் கிழக்கு மாகாணத்தில் இது சாத்தியமாகாது எனவும் இப்பத்திரிகை தெரிவித்தது.

(4 ஆம் பக்கம் பார்க்க)

## 20 இளைஞர் கைது

(திருக்கோவில்)

திருக்கோவில் பகுதியைச் சேர்ந்த இருபது தமிழ்இளைஞர்களை சிறிலங்கா இராணுவத்தினர் கைதுசெய்துள்ளனர்.

நேற்று முன்தினம் திங்கட்கிழமை இப்பகுதியை சுற்றிவளைத்து தேடுதல் நடத்திய இராணுவத்தினர் சுமார் இருபது தமிழ் இளைஞர்களை கைது செய்து திருக்கோவில் இராணுவமுகாமிற்கு அழைத்துச் சென்றனர். தற்போது இவர்களுக்கு என்ன நேர்ந்தது என்பது பற்றிய எந்த தகவலும் இதுவரை கிடைக்கவில்லை. (க)

## ஒரு ஆணின் சடலம் திருக்கோவிலில்கரைஒதுங்கியது

(திருக்கோவில்)

திருக்கோவில் இராணுவ முகாமை அண்டிய கடற்கரைப் பகுதியில் ஓர் ஆணின் சடலம் கரை ஒதுங்கியது.

இச் சடலம் கடந்த திங்கட்கிழமை இப் பகுதி மக்களால் மீட்டு எடுக்கப்பட்டது. இராணுவத்தினரினால் தடுத்து வைக்கப்பட்டிருந்த தமிழ் இளைஞரின் சடலமாக இருக்கலாம் என இப் பகுதி மக்கள் சந்தேகம் தெரிவித்தனர். (க)

### பாடசாலைகள் ஆரம்பிப்பது

## அதிபர்கள் அறிக்கையின்பின்பே முடிவு எடுக்கப்படும்

(யாழ்ப்பாணம்)

எதிர்வரும் பத்தாம் திகதி ஒவ்வொரு பாடசாலை அதிபர்களும் தமது பாடசாலைகளின் சூழல்பற்றி அறிக்கைகள் சமர்ப்பித்ததைத் தொடர்ந்து அன்றைய தினமே பாடசாலைகள் ஆரம்பிப்பது பற்றிய முடிவு எடுக்கப்படும் என வடமாகாண கல்விப்பணிப்பாளர் தெரிவித்துள்ளார்.

மேலும் ஒரு சில கிராமப்புற பாடசாலைகளில் கடந்த விஜயதசமி அன்று ஏடுதொடக்கப்பட்டுள்ளதுடன், வகுப்புகளும் ஆரம்பிக்கப்பட்டுவிட்டதனாலும் எமது மாணவர்களின் கல்வியை மேம்படுத்த வேண்டும் என்பதனாலும் மீண்டும் பாடசாலைகளை ஆரம்பிக்கத் தீர்மானித்துள்ளதாக அவர் கூறினார். (லோ)

## சமுகம் தரவும்

(யாழ்ப்பாணம்)

மட்டு - அம்பாறை மாவட்டங்களைச் சார்ந்த பல்கலைக்கழக மாணவர்களை இன்று காலை 9 மணிக்கு பல்கலைக்கழகத்தின் ஆனந்த குமாரசாமி விடுதிக்கு சமுகம் தருமாறு மட்டு - அம்பாறை பல்கலைக்கழக மாணவர் ஒன்றியம் கேட்டுக் கொண்டுள்ளது. கடந்த மாதம் 17, 18ஆம் திகதிகளில் தமது பெயர்களைப் (4 ஆம் பக்கம் பார்க்க)

## இரு தமிழ் இளைஞர்கள் பனங்காட்டில் சுட்டுக் கொலை

(அக்கரைப்பற்று)

அக்கரைப்பற்றில் உள்ள பனங்காடு என்ற கிராமத்தை சேர்ந்த இரு தமிழ் இளைஞர்களை சிறிலங்கா இராணுவத்தினர் சுட்டுக் கொலை செய்துள்ளனர்.

கடந்த ஞாயிற்றுக்கிழமை மேற்படி கிராமத்தை சுற்றிவளைத்து தேடுதல் நடத்திய சிறிலங்கா இராணுவத்தினர் இரு இளைஞர்களை கைது செய்து முகாமிற்கு அழைத்துச்சென்றனர். பின் அங்கு இவர்களை சுட்டுக் கொலை செய்ததாக தெரிகிறது. (க)

## வலிகாமம் பரம்

### தவறிவிட்டது

30-9-90 ஞாயிறு மாலை 8-00 மணியளவில் யாழ் வைமன் வீதியில் சைக்கிளில் செல்லும்போது இரண்டு தலையணைகளும் எட்டு படுக்கை விரிப்புகளும் வழுக்கி விழுந்து விட்டன. கண்டெடுத்தவர்கள் ரீ சிங்கராயர், 772 ஆஸ்பத்திரி வீதியில் ஒப்படைக்கவும். (R -689)

புங்குடுதீவு 10 ஆம் வட்டாரத்தைச் சேர்ந்த சின்னத்தம்பி. இராமச்சந்திரன் என்பவருடைய அடையாள அட்டை 19.09.90 அன்று அராலித்துறையில் தவறி விட்டது. தயவு செய்து கண்டெடுத்தவர்கள் ஈழநாதம் காரியாலயத்திலோ அல்லது சின்னத்தம்பி இராமச்சந்திரன் 3ஆம் வட்டாரம் புங்குடுதீவு எனும் விலாசத்திலோ ஒப்படைக்கவும். R/693

துரைசிங்கம் தர்மகுலசிங்கம் ஆகிய எனது அடையாள அட்டையும்(இல520133160V) வாகன லைசென்சும் (இலDL 319626) விளான் பகுதியில் தவறிவிட்டன. கண்டெடுத்தவர்கள் ஈழநாதம் காரியாலயத்தில் அல்லது கீழுள்ள முகவரியில் ஒப்படைக்கவும். சன்மானம் வழங்கப்படும். அம்பலவாணர் வீதி, உடுவில் கிழக்கு, சுன்னாகம். (R/680)

### காணவில்லை

ஜேர்மன் செப்பட் இன பெண் நாய் இரவு நேரம் கட்டை அவிழ்ந்து வீட்டை விட்டு வெளியேறியுள்ளது. இதுவரை வீடு வந்து சேரவில்லை அதை யாராவது கண்டாலோ பிடித்துக் கொடுத்தாலோ சன்மானமாக 1000/- வழங்கப்படும். தொடர்பு கொள்ள வேண்டிய முகவரி 386 ஆஸ்பத்திரி வீதி. யாழ்ப்பாணம், உரிமையாளர்: ஜே. ஏ. ராஜரட்ணம் (R/694)

"V. P." என்று குறிசுடப்பட்ட கன்று ஈனும் நிலையிலுள்ள பெரிய பசுமாடும், மூன்று ஒன்றரை வயதுடைய கன்றுகளும் காணாமல் போய்விட்டன. கன்றுகளில் ஒன்று பிறவுண். ஒன்று வெள்ளை. தகவல் தெரிந்தவர்கள் தயவு செய்து V A சுவாம்பிள்ளை 48, சோமசுந்தரம் அவனியு. சுண்டுக்குளி, யாழ்ப்பாணம் எனும் முகவரியில் தொடர்பு கொள்ளவும். சன்மானம் வழங்கப்படும். (R/ 696)

### டில்கா வாச் வேகஸ்
### (Dilka Watch Works)

வாடிக்கையாளரின் வசதிக்கமைய எமது ஸ்தாபனம் மானிப்பாய் வீதி ஆனைக்கோட்டையில் (இராம சபைக் கருகில்) நடைபெறுகின்றது சகல மணிக்கூடுகளும் உத்தரவாதத்துடன் திருத்திக் கொடுக்கப்படும். சகல எலெக்ரோனிக் கடிகாரங்களின் பற்றறிகளும் விற்பனைக்குண்டு (B–1444)

### இடம் மாற்றம்

ரதி வோச் வேக்ஸ் அன் ஸ்ரோர்ஸ் இல. 14, கஸ்தூரியார் வீதியிலிருந்து இல. 12, பொன்னையா லேன், ஆறுகால்மடம். ஆனைக்கோட்டையில் (பிடாரி கோயில் உப தபால் அலுவலகத்திற்கு அருகில்) இயங்கி வருகின்றது என்பதை எமது வாடிக்கையாளர்களுக்கு அறியத்தருகின்றோம். திருத்துதல் வேலையும் நடைபெற்றுக் கொண்டிருக்கின்றது. (B - 1370)

# வாகனங்கள், சைக்கிள்கள் மீது ஒழுங்குக் கட்டுப்பாடு

(பூநகரி)

வாடியடி சந்தையை சூழவுள்ள பகுதி வீதிகளில் பிரயாணிகளின் செல்வதிலும்வாகனங்கள் செல்வதிலும் தொல்லைகள் அதிகரித்து வருவதால் 01-10-90 திங்கள் முதல் வாகனங்கள், சைக்கிள்கள் நிறுத்துவதில் கட்டுபாடுகள் விதிக்கப்பட்டுள்ளன.

இதன்படி சைக்கிள்கள் அதற்கென அனுமதிக்கப்பட்ட இடத்தில்மட்டு மேநிறுத்தப்பட முடியும் லொறி மினிபஸ் போன்றவைகள் வாடியடியில் இருந்து ஒருமைல் சுற்றாடலுக்குள் அனுமதியின்றி நிறுத்தப்படின் அவற்றிற்கு வரி அறவிட நடவடிக்கை எடுக்கப்படும். பூநகரி விடுதலைப் புலிகள் மக்கள் முன்னணி செயலகம் இது தொடர்பாக கூடிய நடவடிக்கை எடுத்துள்ளதுடன் இதற்கான அறிவித்தல்களையும் ஒட்டியுள்ளது.

## 60ஆம் நாள் நெஞ்சமதில் நிழலாய்

கோட்டையை மீட்க கொடியோரை
ஒழிக்க காட்டாற்று வெள்ளம்
போல களத்திடை புகுந்த

| | |
|---|---|
| 1. கப்டன் கண்ணன் | 2. கப்டன் ஜொனி |
| 3 கப்டன் விக்கிரம் | 4. கப்டன் யசோ |
| 5. கப்டன் கருணாநிதி | 6. லெப். மோகன் |
| 7 லெப். நெல்சன் | 8. லெப். புரட்சிமாறன் |
| 9. லெப் நிசாந்தன் | 10. 2-ம் லெப். அலீப் |
| 11. 2-ம்லெப். நிசாந்தன் | 12 2-ம் லெப். டயஸ் |
| 13 2-ம் லெப் எட்ரிக்ஸ் | 14. 2-ம் லெப். சரத்பாபு |
| 15. 2-ம் லெப். சுபேசன் | 16. 2-ம் லெப் லோசன் |

### வீரவேங்கைகள்

| | |
|---|---|
| 17. ஜேம்ஸ் | 18. அனிபா |
| 19. பிலா | 20. வசிட்டன் |
| 21. மாதுரி | 22. சங்கீதா |
| 23. கெனடி | 24. சந்துரு |
| 25. அனுரா | 26 சிலன் |
| 27. பிலிப்ஸ் | 28. மாதங்கி |

*தீரம் நிறை தியாக வேங்கைகளுக்கு*
*வீரவணக்கம்*
*கோட்டை வாசலிலே பறக்கும்கொடி அசைவில்*
*கேட்குதன்றோ உங்கள் புகழ் நாமம்*
*நிச்சயம் யாம் மீட்டிடுவோம் தமிழீழம்*

புலிகளின் தாகம் தமிழீழத் தாயகம்.
*- தமிழீழ விடுதலைப்புலிகள்*

## நன்றி நவிலல்

### திரு. கந்தையா இரவீந்திரன்
### (யாழ்/ வைத்தீஸ்வரா கல்லூரி ஆசிரியர்)

1990 ஆம் ஆண்டு ஆகஸ்ட் மாதம் 20 ஆம் திகதி காலை 10-30 மணியளவில் வடடுக்கோட்டையில் இடம்பெற்ற விமானக் குண்டு வீச்சுக்கு இலக்காகி மரணமடைந்த எனது கணவர் திரு கந்தையா இரவீந்திரனின் இறுதிச் சடங்குகளில் கலந்து கொண்டு ஆறுதலளித்து, உதவிகள் புரிந்த யாழ் வைத்தீஸ்வரா கல்லூரி, வட்டு திருஞானசம்பந்த வித்தியாசாலை அதிபர்கள், ஆசிரியர்கள், மாணவர்களுக்கும் எனது கணவரின் நண்பர்களுக்கும் வடடு இந்து வாலிபர் சங்க இளைஞர்களுக்கும் ஏனைய நண்பர்களுக்கும், உறவினர்களுக்கும் எனது மனமார்ந்த நன்றியைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

திருமதி மனோரஞ்சிதம் இரவீந்திரன்
வடடு மேற்கு,
வட்டுக்கோட்டை.

(R/ 684)

### மலிவு விற்பனை

சந்தர்ப்பத்தை தவறவிடாதீர்கள். 1989, 1990 இல் மீரா வெளியீடுகளாக வெளிவந்த நாவல்கள். 100/- ரூபாவுக்கு புத்தகங்கள் வாங்குபவர்களுக்கு 40/ ரூபாவுக்கு புத்தகங்கள் இலவசமாக வழங்கப்படுகிறது. துர்க்கா ஸ்ரேசனேர்ஸ் சுன்னாகம், திருக்கணிதம் சாவகச்சேரி, ஸ்ரீ காந் புத்தகசாலை நல்லூர். (R/675)

### இடம் மாற்றம்

(கொழும்புத்துறை)

கிளிநொச்சி மாவட்ட கூட்டுறவு உதவி ஆணையாளர் திணைக்களம் பரந்தனில் சேதமடைந்த நிலையில்உள்ளதால் பூநகரி பல நோக்குக் கூட்டுறவுச் சங்க அலுவலகத்திற்கு அண்மையில் இருக்கும் திரு. ச சங்கரநாதன் இல்லத்தில் தற்காலிகமாக கடந்த மாதம் 14ஆம் திகதி தொடக்கம் செயற்பட்டு வருகின்றது. (24)


## சித்ராலயா போட்டோஸ்ரட்

*சித்ராலய நிறுவனம் தரமான போட்டோஸ்ரட் பிரதிகளை 351, கோவில் வீதி, நல்லூர். (கம்பன் கோட்டம் முன்பாக) என்ற முகவரியில் பெற்றுக்கொள்ளலாம்.*

வேலை நேரம்: காலை 9 மணி முதல் 12 மணிவரை

(B- 1454)

## ஆண்டு 6 தொடக்கம் 11 வரையிலான மாணவர்களின் கவனத்திற்கு

## அஞ்சல் கல்விச் சேவை

(வலிகாமம் பிரிவு)

எமது நிறுவனத்தில் பயின்று கொண்டிருக்கின்ற. இதுவரை எமது நிறுவனத்தில் பயிலாத யாழ். மாவட்டத்தின் வலிகாமம் பகுதியில் வதியும் ஆண்டு 6 தொடக்கம் 11 வரையிலான மாணவர்கள் இக் கல்விச் சேவையில் பயில விரும்பின் மாணவர்களின் பெயர்களை அவர்களது பெற்றோர்கள் / பாதுகாவலர்கள் 9 10. 1990 அன்று அல்லது அதற்கு முன்னதாகப்ப திவுசெய்து கொள்ளுதல் வேண்டும்.

UNIVERSAL FOR GOD AND COUNTRY

பதிவு ஏற்றுக்கொள்ளப் படும நேரம்
தினமும் காலை 9. 00
மணிதொடக்கம் 12. 00
மணிவரை

யூனிவேர்சல்
கந்தர்மடம்,
யாழ்ப்பாணம்.

(B- 1452)


### நெஞ்சம் கனக்கும்
## 60ஆம் நாள் நினைவலைகள்

கோண்டா-விலில் மலராய்
9
—
1
—
1970



கோட்டை-யதில் வரலாறாய்
5
—
8
—
1990

*யாழ். கோட்டை இராணுவ முகாம் தாக்குதலில்*
*வீர சுவர்க்கம் புகுந்த*

### கப்டன் கண்ணன் (கண்ணாடி)
### (கந்தப்பிள்ளை அருட்செல்வன்)
(வலிகாமம் நிதிப் பொறுப்பாளர்)

தமிழன்னை சிறைமீட்டு தாய் மண்ணின் துயர்துடைக்க
தாய் தந்தை முகம் மறந்து தலைவன் வழி நின்று
தீரமதைக் காட்டும் புலித்தானையதில் இணைந்தாய்
வீரம் எம்மினத்தே மாறாத சொத்தென்று
சங்கநாதம் முழங்கி நின்று சரித்திரம் நீ படைக்க
சிங்கச் சாத்தானின் படையெதிர்த்து கோட்டையதில்
- பொருதச் சென்றாய்
வேட்டுக்கள் தீர்த்த உந்தன் ஈழ வேட்கையும்
தீரமுன்பே
நாட்டுக்காய் உன்னுயிரை கோட்டையிலே
உறைய வைத்தாய்
ஆட்டமேதும் கண்டிடாத அணியுடை புலிப்படையும்
மீட்கும் மட்டும் கோட்டையதில் போர் என்றறைந்து
புலிக் கொடியேற்றினர் நேற்றைய நாளதனில்
போரணிதொடரும் உந்தன் கனவுகள் பலிக்கும்
கீழ்த்திசை வெளுக்கும் கீற்றொளி படரும்
நாளது விரையும் உன் தலைவன் பணியது
நிறையும்

இவருடன் வீரமரணமடைந்த ஏனைய போராளிகளுக்கும் எமது நினைவஞ்சலிகள்.

நந்தாவில் அம்மன் வீதி,
கோண்டாவில்.

குடும்பத்தினர்,
உறவினர், நண்பர்கள்.
(R 695)

## சிந்தனைக்கு

*அநீதியைத் தாங்குபவனை விட, அநீதி இழைப்பவனே, என்றும் அதிக அவதியுறுவான்.*

— பிளேட்டோ


ஈழநாதம்

31, வைமன்வீதி, யாழ்ப்பாணம். 03-10-90
தொலைபேசி
ஆசிரியபீடம்: 025-2839 நிர்வாகபீடம்: 2208
த. பெ. எண் 05


# இன வாதத்தால் சீரழிந்த பொருளாதாரம்

கடந்த மூன்றரை மாதப் போரினால் சிறிலங்காவின் பொருளாதாரம் என்றுமில்லாதவாறுபாதிக்கப்பட்டுள்ளது. தொடர்ந்து போரை நடாத்துவதானால் பொருளாதாரத் தற்கொலைக்கு சமமான செயல் என பொருளியல் நிபுணர்கள் சிறிலங்கா அரசாங்கத்தை எச்சரித்துள்ளனர்.

1983 ஆம் ஆண்டில் இருந்து பல ஆயிரம் கோடி ரூபாக்கள் போருக்குச் செலவிடப்பட்டுள்ளன. இன்னும் செலவிடப்பட்டுக் கொண்டிருக்கின்றன.

தனியாக இராணுவச் செலவீடுகள் மட்டுமே போரினால் ஏற்படும் செலவுகள் அல்ல. போரினால் உற்பத்தித் துறைகள் வெகுவாகப் பாதிக்கப்படுகின்றன; அழிக்கப் படுகின்றன.

1983 ஆம் ஆண்டு - போரினால் அல்ல - தமிழர் மீது கட்டவிழ்த்துவிடப்பட்ட இனக்கலவரத்தினால் ஏற்பட்ட உற்பத்தித்துறை சார்ந்த அழிவுகள் இன்னும் சிறிலங்காப் பொருளாதாரத்தில்நிவிர்த்திசெய்யமுடியாதஇழப்பாகவே உள்ளன.

நிலைமை இவ்வாறாக இருக்கும் போது, 1983 ஆம் ஆண்டுக்குப் பின்னர் இலங்கையில் வடக்கு - கிழக்கில் மட்டுமல்ல தெற்கில் நடந்த போராட்டங்களினால் ஏற்பட்ட இழப்புக்களை எப்பொழுது ஈடுசெய்வது?

1987 ஆம் ஆண்டு ராஜீவ்காந்தியுடன் சமாதான ஒப்பந்தத்திற்குப்போன ஜே.ஆர் அரசாங்கம் இந்தியாவுடன் நட்புடன் இருக்க வேண்டும் என்பதற்காகச் செல்லவில்லை. ஜே. ஆர். தனது தலையிலுள்ள சுமையை வேறு யாராவது தலையில் ஏற்றிவிட நினைத்த வேளையில் ராஜீவ் தானாக முன்வந்து தலையைக் கொடுத்தார்.

1987இல் 'யாழ்ப்பாணத்தைக்கைப்பற்றும்', திட்டத்திற்கு பணம் இல்லை என நிதி மந்திரி ரொனி டீ மெல் கைவிரித்ததாகவும் இதனாலேயே அத்திட்டம் கைவிடப் பட்டதாகவும் ஜே. ஆர். ஜெயவர்த்தானவே ஒரு பேட்டியில் தெரிவித்துள்ளார்.

கடந்த காலத்தில் இவ்வளவு பெரிய அனுபவத்தை சிறிலங்கா அரசாங்கம் பெற்றிருந்தும் இம்முறைவிடுதலைப் புலிகளை அழித்து ஒழித்து விடுவதாக தமிழருக்கு எதிராக வரிந்துகட்டிக் கொண்டு போரில் இறங்கியது தமிழரும், அவர்களின் பொருளாதாரமும் அழிந்தால் சரி என்றே போரை நடத்தியது. ஆனால் இழப்புக்கள் தமிழர் தரப்பில் மட்டுமல்ல அரசதரப்பிலும் பெருமளவில் ஏற்பட்டது எதிர்பார்த்த மாதிரி போரிலும்வெல்லவில்லை.

தற்போதைய நிலையில் தொடர்ந்தும் விடுதலைப் புலிகளுடன் போரை நடத்துவதானால் 35,000 மில்லியன் (3500 கோடி) ரூபாக்கள் தேவை என இராணுவ, பொருளியலாளர்கள் தெரிவிக்கின்றார்கள். இத்தொகை யானது ஏறத்தாழ மகாவலி அபிவிருத்தித் திட்டத்திற்குப் பயன்படுத்தப்பட்ட தொகையளவாகும்.

இப்போரை ஆரம்பத்திலேயே தொடங்காமல் பௌத்த சிங்கள அரசாங்கம் இலங்கைத்தீவில் தமிழ்மக்களின் நியாயபூர்வமான உரிமைகளை வழங்கியிருந்தால், இலங்கையின் பொருளாதாரத்தில் தமிழருக்கும் பங்குண்டு என எண்ணியிருந்தால் இந்நிலை ஏற்பட்டு இருக்காது.

அன்று தமிழருக்கு பல்கலைக்கழகங்களில் சில இட ஒதுக்கீடுகளைச் செய்ய நிதி பற்றாக்குறை எனக் கூறிய அரசாங்கம், இன்று பல ஆயிரம் கோடி ரூபாக்களை இராணுவச் செலவீட்டிற்கு ஒதுக்குகின்றது.

கடந்த காலத்தில் தமிழ்ப்பகுதி அபிவிருத்திக்கு என ஒதுக்கப்பட்ட நிதியைவிட, தமிழர்களை அழிப்பதற்கு ஒதுக்கிய நிதியின் அளவும் மிகவும் கூடுதலாகும்.

தமிழரை அழிக்கவும், அவர்கள் தம் பொருளாதாரத்தை ஒழிக்கவும் சிறிலங்கா அரசாங்கம் எண்ணிய வேளை இதனால் தனக்கு ஏற்படப்போகும் அழிவுகளைப் பற்றி எண்ணாமையே இன்றைய சிறிலங்காவின் பொருளாதார சீரழிவுக்குக் காரணமாகும்.

## கூட்டுறவு மாநாடு

யாழ். மாவட்ட கூட்டுறவு ஆக்க உதவி ஆணையாளர் கணக்காய்வுப் பகுதி திணைக்கள வெளிக்கள உத்தியோகத்தர்களின் மகாநாடு எதிர்வரும் 10 ஆம் திகதி புதன் கிழமை காலை 10 மணிக்கு யாழ்ப்பாணம் பொன்னப்பா ஒழுங்கை 25 ஆம் இலக்கத்தில் முன்னைய அலுவலகத்தில் நடைபெறும் என்றும் தவறாது சமூகம் கொடுக்க வேண்டும் என்றும் யாழ். மாவட்ட கூட்டுறவு ஆக்க உதவி ஆணையாளர் (கணக்காய்வுப்பகுதி) மா. கனகசபை அறிவித்துள்ளார்.

யாழ். மாவட்ட கூட்டுறவுத் திணைக்கள கணக்காய்வுப் பகுதி அலுவலகம் மேற்காண் விலாசத்தில் இயங்குவதால் சம்பந்தப்பட்டவர்கள் தொடர்பு கொள்ளும்படி கேட்டுக் கொள்ளப்படுகின்றனர்.

# இடஒதுக்கீட்டை நடைமுறைப்படுத்த நீதிமன்றம் இடைக்காலத் தடை

(டில்லி)

இந்தியாவில், இட ஒதுக்கீடு முறையை அரசாங்கம் நடைமுறைப் படுத்தக் கூடாது என இந்திய உயர் நீதிமன்றம் இடைக்கால தடைவிதித்துள்ளது.

நேற்று முன்தினம் ஐந்துநீதிபதிகளைக் கொண்ட உயர் நீதிமன்றம் எதிர் தரப்பு மனுக்களின் விசாரணையின் முடிவில் இதனை அறிவித்தது இம் மாதம் 25 ஆம் திகதி வரை இதனை நடைமுறைப் படுத்த வேண்டாம் எனவும் அறிவித்துள்ளது.

இதற்கிடையில் உயர்நீதி மன்றத்தின் இந்த அறிவித்தலைத் தொடர்ந்து பிரதமர் வி. பி. சிங் பதவி விலகவேண்டும் என பிரதம எதிர்க்கட்சியான இந்திரா காங்கிரஸ் பாராளுமன்றத்தில் கேட்டுக் கொண்டது.

இவர் உடனடியாகப் பதவி விலகவேண்டும் என தான் பாராளுமன்றத்தில் உண்ணாவிரதம் இருக்கப்போவதாக இந்திரா காங்கிரஸ் மூத்த உறுப்பினர் ஒருவர் தெரிவித்தார்.

இதேவேளை அரசாங்கத்தின் இடஒதுக்கீட்டு வன்முறையில் குறைந்தது 70பேர்வரை இறந்துள்ளனர். இவர்களில் 50பேர் தீக்குளித்து தற்கொலை செய்துகொண்ட மாணவர்கள் ஆவர். இத் தகவல்களை இந்திய உயர் நீதிமன்றம் வெளியிட்டது.

### ஈராக் மீது இராணுவ நடவடிக்கை

# ஐ. நா. தீர்மானிக்குமானால் சோவியத் ஒத்துழைக்கும்

(நியூயோர்க்)

வளைகுடாப் பிரச்சினைக்கு மிகத் தீவிரமான தவிர்க்க முடியாத சூழ்நிலையில் ஐ நா. மன்றம் ஈராக் மீது இராணுவ நடவடிக்கை எடுக்குமானால் அதில் பங்குகொள்ள சோவியத் யூனியன் தயாராக இருக்கும் என்று சோவியத் யூனியனின் வெளியுறவுஅமைச்சர் செவர்னாட்சே அறிவித்துள்ளார்.

நேற்று முன்தினம் என். பி. ரி தொலைக் காட்சிக்கு பேட்டியளித்த செவர்னாட்சே இவ்வாறு பதிலளித்தார்.

இதேவேளை ஐ. நா. மன்றத்தின் அனுமதியின்றி அமெரிக்கா ஈராக் மீது இராணுவ நடவடிக்கை எடுக்குமானால் உங்களது பங்கு எவ்வாறு இருக்கும் என்று கேட்டதற்கு, கருத்துத் தெரிவிக்க விரும்பவில்லை என்றும் செவர்னாட்சே தெரிவித்தார்.

# ஈராக் மீது அபராதம் விதிக்க ஐ. நாவுக்கு அமெரிக்கா யோசனை

(நியூயோர்க்)

குவைற் மீது படையெடுத்தமைக்காக ஈராக் மீது ஐ. நா. மன்றம் அபராதம் விதிக்க வேண்டும் என்பது குறித்து அமெரிக்க ஜனாதிபதி ஜோர்ஜ் புஷ்ஷும், பிரித்தானியப் பிரதம மந்திரி மார்க்கிரட் தட்சரும் பேச்சுவார்த்தை நடத்தினர்.

நேற்று முன்தினம் நியூயோர்க்கில் கூட்டப்பட்ட 45 ஆவது ஐ. நா. மன்றத்தின் கூட்டத்தில் கலந்து கொள்ள வந்திருந்த போதே இப்பேச்சுவார்த்தை நடத்தப்பட்டதாகக் கூறப்படுகிறது.

இதேவேளை வளைகுடாவில் தேவையை விட ஒருநாள் கூட அமெரிக்கப்படை தங்கி இருக்கமாட்டாது என ஜோர்ஜ்புஷ் அறிவித்துள்ளார்.

# ஈராக்கில் இருந்து ஒன்பது பிரெஞ்சுப் பிரசைகள் விடுதலை

(பாக்தாத்)

ஈராக்கில் தடுத்து வைக்கப்பட்டிருந்த பிரெஞ்சுக்காரர்கள் ஒன்பது பேர் விடுதலை செய்யப்பட்டுள்ளனர் என ஈராக்கிய ஜனாதிபதி சதாம் உசைன் அறிவித்துள்ளார்.

நேற்று முன்தினம் தனிப்பட்ட முறையில் இவ்வறிவித்தலை வெளியிட்டார் என செய்திகள் கூறுகின்றன.

பாக்தாத்தில் இருக்கும் பிரான்ஸ் நட்புறவுக் கழகத்திடம் இச் செய்தி தெரிவிக்கப்பட்டதாக அறிவிக்கப்பட்டுள்ளது.

ஈராக்கில் தாக்குதல்கள் எதுவும் நடைபெறாது இருக்க வெளிநாட்டவர்களை குறிப்பாக மேலை நாட்டவர்களை ஈராக் தடுத்து வைத்திருந்தது என்பது குறிப்பிடத்தக்கதாகும்.

# தூதுவராலயங்கள் அமைக்க இஸ்ரேல்-சோவியத் இணக்கம்

(நியூயோர்க்)

சோவியத யூனியனும் இஸ்ரேலும் தமது தலைநகரங்களில் இருநாடுகளின் காரியாலயங்களையும் அமைத்துக் கொள்ள இணங்கியுள்ளன.

ஐ. நா. மன்றத்தில் சந்தித்துப் பேசிய இவ்விருநாடுகளின் வெளிநாட்டமைச்சர்களும் இது குறித்த ஒரு உடன்படிக்கையில் கையெழுத்திட்டனர்.

இதுவரை இந்த இரு நாடுகளிலும் அவர்களது பிரதிநிதிக்காரியாலயங்கள்மட்டுமே இருந்தன என்பதும் குறிப்பிடத்தக்கது.

## இப்படியும் சிலர்

(ஈச்சமோட்டை)

கொழும்புத்துறையில்உள்ள தேநீர்க் கடை ஒன்றில் இடியப்பம், பற்றிஸ், வடை என்பனவற்றை ருசித்து - ரசித்துச் சாப்பிட்டார் ஒருவர். தேநீர்க் கடை உரிமையாளர் கணக்கு 70.00 ரூபா என்றார். பணம் என்னிடம் இல்லை எனக் கூறிய மூதலாமவர், தன்னிடத்தில் இருந்த நான்கு உணவு முத்திரைக் கூப்பன்களை கடைக்காரரிடம் ஒப்படைத்துவிட்டு ஓடி மறைந்தாராம். இந்தச் சூழ்நிலையில் இப்படியும் சிலர் நடந்து கொள்வதாக அருகிலிருந்தோர் பேசிக்கொண்டனர்.

# மேஜர் செல்வராஜா வீதித்திறப்பு

(கோண்டாவில்)

வசாவிளான் பகுதியில் கடந்த 27-08-90 அன்று சிறிலங்கா இராணுவத்துடன் ஏற்பட்ட நேரடி மோதலில் வீரமரணமடைந்த மேஜர் செல்வராஜா மாஸ்ரரின் 31 ஆம் நாளான 28-9-90 அன்று கோண்டாவில் முத்தட்டுமடம்வீதியெனஅழைத்து வந்த வீதியை மேஜர் செல்வராஜா வீதி எனத் திறந்து வைத்தனர். அவ்வீதித் திறப்பு விழாவின் போது கோண்டாவிலில் வீரமரணமடைந்த போராளியான சாந்தனின் தகப்பனார் தர்மலிங்கம் விளக்கேற்றி வைக்க தாயார் வீதியை திறந்து வைத்தார். இதன்பின் விடுதலைப்புலிகள் இயக்கத்தைச் சேர்ந்த குணா, சுமன் என்பவர்களும் சிற்றூரவையின் முக்கிய உறுப்பினர்களும் உரையாற்றினார்கள். சிற்றூரவையைச்சேர்ந்த சந்திரசேகரம் உரையாற்றும் போது விடுதலைப்புலிகள் இலட்சிய வேள்வித்தீயில் நின்று போராடுபவர்களெனக் கூறினார். குணா உரையாற்றும்போது விடுதலைப் புலிகளின் வளர்ச்சி நிலையைச் சுட்டிக் காட்டினார். இத்திறப்பு விழாவுக்கு மக்கள் பெருந்திரளாகத் திரண்டிருந்தனர்.

# ஞானபண்டித பாடசாலையில் விசேட வகுப்புக்கள் ஆரம்பம்

(கொழும்புத்துறை)

கொக்குவில் ஸ்ரீ ஞானபண்டித வித்தியாலய ஆசிரியர்கள் திங்கள் முதல் பாடசாலையை ஆரம்பித்து விசேட வகுப்புக்களை நடத்துகின்றனர்.

அருகில் உள்ள வேறு பாடசாலை மாணவர்களும் தற்காலிகமாக இவ்வகுப்புக்களில் பங்கு பெறலாமென அதிபர் கா. கணேசதாசன் அறிவித்துள்ளார்.

மேலும் வீட்டுத்தோட்டம் விவசாயத்துறையில் ஈடுபடுவோருக்கு சிரமதான முறையில் உதவிகள் புரிவதற்கு மாணவர் ஆசிரியர் குழுவும் தெரிவு செய்யப்பட்டுள்ளது. உதவிகள் வேண்டுவோர் தொடர்பு கொள்ளும் படி கேட்கப்படுகின்றனர். (24)

# அகதிகளுக்கு உதவி

(கொழும்புத்துறை)

கோண்டாவில் ஸ்ரீ அற்புத நர்த்தன விநாயகர் சனசமூக நிலையமும், குமரன் விளையாட்டுக் கழகமும் கோண்டாவில் வாழ் மக்களிடம் இருந்து 19,484 ரூபா பெறுமதியான உணவுப் பொருட்களைச் சேகரித்து இடம் பெயர்ந்துள்ள அகதிகளிடம் ஒப்படைப்பதற்காக விடுதலைப் புலிகளின் மக்கள் முன்னணியின் புனர்வாழ்வுப் பிரிவிடம் கொடுத்துள்ளன.

# திருமலை கோட்டை அகதிகள்
# சிறிமா புரவில் குடியேற்றம்

(வடமராட்சிகிழக்கு)

திருமலைக் கோட்டைக்குள் கடந்த மூன்று வருடங்களாக தஞ்சம் புகுந்திருந்த சிங்களக் குடும்பங்கள் திருமலை சிறிமா புரம் பகுதியில் குடியேற்றப் பட்டிருப்பதாகவும் அவர்கள் அங்குள்ள வீடுகளைத்திருத்தி யமைத்து வருவதாகவும் தெரி கிறது.

திருமலை நகரில் சிங்கள வியாபாரிகளின் நடமாட்டமே காணப்படுன்றது. விறகு உட் படப் பல பொருட்களை அவர்கள் கொண்டுவந்து வியாபாரம் செய்கின்றனர்.

திருமலை நகரில் தமிழர் களின் வீடுகள், வர்த்தகநிலை யங்கள் கொள்ளையடிக்கப் பட்டு. பின்பு எரிக்கப்பட்டும் உள்ளன.

திருமலை நகரிலிருந்து நிலா வெளி உட்பட சில இடங்க ளுக்கு மட்டும் உள்ளூர் பஸ் சேவை நடத்தப்படுகின்றது. மட்டக்களப்புக்கு வாரத்தில் இரண்டு நாட்கள் மட்டும் பஸ் சேவை நடத்தப்படுவதோடு கொழும்புக்கான பஸ்சேவை கள் நடத்தப்பட்டும் வருகின் றன.

கொழும்பு பஸ்சேவை நடத் தப்பட்டு வருகின்றபோதிலும் தம்பலகாமத்தில் உள்ள இரா ணுவ முகாமில், தமிழர்கள் சிலர் இறக்கப்பட்டு இராணு வத்தால் அழைத்துச் செல்லப் படுகின்றனர்.

திருமலையில் உள்ள தமிழர் களின வீடுகளில் தற்போது தங்கியிருக்கும் தமிழர்களின் பெயர்ப்பட்டியலை இராணு வம்அவர்களது வீட்டுவாசல் களில் எழுதித் தொங்கவிட்டு வருகின்றது.

அதேவேளை தற்போது தின மும் இரவு 9 மணி தொடக்கம் காலை 6மணிவரை அங்கு ஊரடங்கு உத்தரவு அமுலில் உள்ளது.

திருமலை நகரில் உள்ள மக் கள் தொடர்ந்தும்பதற்ற நிலையிலேயே வாழ்கின்றனர். (36)

## வீர வணக்கம்

(யாழ்ப்பாணம்)

பலாலி முகாமில் இருந்து கட்டுவன் பகுதியை நோக்கி கடந்த சனிக்கிழமை சிறி லங்கா இராணுவத்தினால் மேற்கொள்ளப்பட்ட ஷெல் தாக்குதலில் வவுனியாவைச் சேர்ந்த சிவதர்சன்(சண்முகம்) என்பவரும் விடுதலைப்புலிகள் மகளிர் அணியைச் சேர்ந்த அனார்கலி (வல்வெட்டித் துறை), நாயகி (கோண்டா வில்) ஆகியோர் வீரமரண மடைந்துள்ளனர். இவர்க ளுக்கு விடுதலைப்புலிகள் தமது வீரவணக்கத்தை தெரி வித்துள்ளனர். (க)

# இடம் பெயர்ந்த ஆசிரியர்களுக்கு ஆகஸ்ட் மாதசம்பள முற்பணம்

(யாழ்ப்பாணம்)

வெளிமாவட்டங்களில் இருந்து யாழ். மாவட்டத் திற்கு இடம் பெயர்ந்து வந்த ஆசிரியர்களுக்கு ஆயிரம் ரூபா சம்பள முற்பணம் வழங்குவ தற்கென வடக்கு கிழக்கு மாகாணசபை செயலாளரால் யாழ். கல்வித்திணைக்களத் துக்கு அனுப்பி வைக்கப்பட்ட பணம் ஆகஸ்ட்மாத சம்பள முற்பணம் வழங்கப்பட மட் டுமே போதுமானதாகவுள் ளது என்றும் இவர்களுக்கான ஆகஸ்ட்மாத கொடுப்பன வுகள் இவ்வாரம் வெள்ளிக் கிழமைக்கு முதல் வழங்கப் படும் என வடமாகாண கல் விப்பணிப்பாளர் இரா சுந்தர லிங்கம் தெரிவித்துள்ளார்.

இதேவேளை வடக்குகிழக்கு தவிர்ந்த ஏனைய மாகாணங் களில் இருந்து இங்கு வந்தி ருக்கும் ஆசிரியர்களுக்கு சம் பள முற்பணம் வழங்குவதற் கான அதிகாரத்தை கல்வி அமைச்சு நமக்கு தரவில்லை என்றும்இந்த அதிகாரத்திற்கு அங்கீகாரம் பெற்றுத்தரும்படி கடந்த 29 ஆம் திகதி நடந்த யாழ். அரசாங்க அதிபருட னான சந்திப்பில் அரசாங்க அதிபரிடம் கோரியுள்ளதாக வும் இந்த அங்கீகாரம் கிடைத்த பின்னரே வடக்கு கிழக்கு மாகாணத்தை தவிர்ந்த ஏனையவற்றிலிருந்து இடப்பெயர்ந்த ஆசிரியருக்கு சம்பளம் வழங்கப்படும் என வும் கூறினார்.

**பணமாக சம்பளம்**

யாழ். மாவட்ட ஆசிரியர் களுக்கு பணமாக சம்பளம் வழங்குவதுபற்றி அவர் கூறு கையில் தற்போதைய நிலை மையை கருத்தில் கொண்டு தாம் கடந்த 29 ஆம் திகதி கூட்டத்தில் யாழ். அரச அதி பரிடம் கோரிக்கை விடுத்துள் ளதாகவும் ஆனால் கடந்த காலத்தில் ஆசிரியர்கள் சம் பளம் பணமாக கொடுக்கப் பட்டு வந்த போது வழிப் பறிக்கொள்ளைகள் நடந்த மையால் மத்திய அரசோ மாகாண அரசோ அந்த அனு மதியை மறுத்து காசோலை களாக சம்பளம் வழங்கும் திட்டத்தை அமுல் படுத்தி இருந்தது எனவும் அவர் குறிப் பிட்டார். (லோ)

# ஊழியர்களை இயக்குனர்கள் தாக்கியதால் வேலை நிறுத்தம்

(வேலணை)

வேலணை பலநோக்குக்கூட் டுறவுச் சங்கத்தில் கடமை யாற்றும் இரு ஊழியர்களை அச்சங்கத்தின் இயக்குனர்க ளாக இருக்கும் இருவர் அடித் தும், ஏசியும் தாக்கியதைத் தொடர்ந்து அச்சங்கத்தில் கடமையாற்றி வருகின்ற அனைத்து தொழிலாளர்க ளும் சென்ற முதலாம் திகதி (01.10.90) திங்கட் கிழமை முதல் கடமைக்குச் செல்வதில் லையென கூறி வேலை நிறுத் தத்தில் குதித்துள்ளனர்.

இருஊழியர்களை தாக்கிய தற்கான சரியான தீர்வுகள் ஏற்படும்வரை தாங்கள் தொடர்ந்தும் வேலைக்குச் செல்வதில்லையென வேலை நிறுத்தத்தில் ஈடுபட்டுள்ள தொழிலாளர்களில் ஒருவர் கூறினார்.

# மானிப்பாய் வைத்தியசாலையில் இட நெருக்கடியால் அவதி

(மானிப்பாய்)

மானிப்பாய் வைத்தியசா லையில் நோயாளிகளின் நெருக்கடி அதிகரித்துள்ளது. இவ்வைத்தியசாலையின் சில கட்டில்களில் இரண்டு நோயா ளர்கள் படுத்திருப்பதையும் காணக்கூடியதாக உள்ளது.

வெளிநோயாளர் பிரிவில் இருந்து அனைத்துப் பகுதிகளி லும் நெருக்கமாக நோயாளி கள் கிடத்தப்பட்டுள்ளதுடன் நடை பாதையில் செல்வோர் நோயாளிக்கு ஏற்றப்பட்டிருக் கும்சேலைன் போத்தல் தாங் கிகளைத்தட்டிவீழ்த்தும் சம்ப வங்கள்அடிக்கடி நிகழ்கின்றது நடைபாதையில் நோயாளிகள் பாய்போட்டுபடுத்திருப்பதால் நோயாளிகளை பார்வையா ளர்கள் காலால் மிதிக்கும் சம் பவங்களும் இவ்வைத்திய சாலையில் சாதாரணமாக நிகழ்ந்துவருகிறது. (லோ)

## பெற்றுக் கொள்ளவும்

ஆனைக்கோட்டைப் பகுதி யில் கண்டெடுக்கப்பட்ட உணவு முத்திரைத் தொகுதி ஒன்று எம்மிடம் கிடைத்துள் ளது. டெலீனா டெலீரா, மேரி லோஜினி, றொகான் மெரிஏமெல்டா என்ற பெயர் களைக்கொண்ட இந்த உணவு முத்திரைகளை உதயதாரகை சனசமூக நிலையத்தினர் கண் டெடுத்து எம்மிடம்ஒப்படைத் தனர். உரியவர்கள் ஆதாரங் களுடன் பெற்றுக்கொள்ளவும்

## தட்டுப்பாடு

(கொழும்புத்துறை)

கொழும்புத்துறை வீதியில் இயங்கிவரும் குருநகர் மத்திய மருந்தகத்தில் மருந்துக்கு பலத்த தட்டுப்பாடு நிலவு கின்றது.

இங்கு தினசரி அகதிகள் உட்பட பெரும்பாலான நோயாளர்கள் சிகிச்சைபெறச் செல்லும் போது மருந்து வகைகள் இல்லை எனத் திருப்பி அனுப்பப்படுகின்ற னர்.

இவ்வைத்தியசாலைப் பிர தம வைத்திய அதிகாரி பல முறை மருந்துத் தட்டுப்பாடு பற்றி மேலிடத்துடன் தொடர்பு கொண்டும் இன்று வரை மருந்து வகைகள் கிடைக்கவில்லை எனத்தெரி விக்கப்படுகின்றது. (24)

**சமூகம் தரவும்**

( 1 ஆம் பக்கத் தொடர்ச்சி)

பதிவு செய்த வெளி மாவட்ட ங்களைச் சார்ந்த மாணவர் கள் அனைவரையும் இச்சந் திப்பில் கலந்து கொள்ளும்படி மேற்படி ஒன்றியம் கேட்டுள் ளது.

**இந்து முஸ்லிம்**

( 1 ஆம் பக்கத் தொடர்ச்சி)

இந்து முஸ்லிம் கிளர்ச்சியை உண்டுபண்ணுவதற்காக இலங்கை அரசாங்கம் முஸ் லிம்களை பாதுகாப்பதற் கெனக் கூறி முஸ்லிம் இளை ஞர்களுக்கு தீவிர ஆயுதப் பயிற்சி அளிக்கிறது.

இதன் மூலம் இந்துக்களுக் கும், முஸ்லிம்களுக்கும் இடை யில் நேரடி மோதலை உண் டாக்குவதற்கு இலங்கை அர சாங்கம் விரும்புகிறது என்றும் குறிப்பிட்டுள்ளது.

எனவே இலங்கை அரசு அங்குள்ள இந்து, முஸ்லிம் மக்களை பாதுகாக்க உண் மையில் விரும்பினால் உடனடி யாக முஸ்லிம்களின் போர் ஆயுத படையை தடைசெய்ய வேண்டியது அவசியம் என்றும் இதன் மூலம் இவர்களிடையே யான முறுகல் தணிவடைய சாத்தியமாகும் எனவும் ரைம்ஸ் ஒவ் இந்தியா எழுதி யுள்ளது.

**இராணுவத்தின்**

( 1 ஆம் பக்கத் தொடர்ச்சி)

விசேட பயிற்சிபெற்ற நவீன ஆயுதங்களையும், கவசவாக னங்களையும்கொண்ட படை, இருபத்தி எட்டுக்கு மேற்பட்ட கடற்படைப் பீரங்கிப் படகு கள், இருபது பீரங்கிப்படைப் பிரிவுகள், எட்டுப் போர்விமா னங்கள், நான்கு உலங்கு வானூர்திகள்என்பனவற்றின் முழுமையான குண்டுவீச்சு, ஆகியன கோட்டை முற்று கையை உடைத்து யாழ். நக ரைக் கைப்பற்றும் முயற்சிக் குப் பயன்படுத்தப்பட்டன. ஆனால் இவர்களால் யாழ். கோட்டையில் இருந்து யாழ், நகரை நோக்கி சற்றேனும் முன்னேறமுடியவில்லை.

கோட்டை முற்றுகையை முறியடிக்கும் முயற்சியில் 13 9.90 அன்று கோட்டையை விட்டு வெளியேற முயன்ற படையினரில் 25இற்கும் மேற் பட்ட படையினர் கோட்டை வாசலிலேயே கொல்லப்பட் டுள்ளனர். பலர் படுகாயம் அடைந்தனர்.

கோட்டை வாசலில் உயி ரிழந்த படையினரின் சடலங் களைக்கூட மீட்கமுடியாத நிலையிலேயே சிறிலங்காப் படை 26. 9. 90 அன்று யாழ் கோட்டையைவிட்டு தப்பிஓடி யது.

கோட்டை வாசலில் உயி ரிழந்த சிறிலங்காப்படையின ரின் பன்னிரண்டுபேரின் சட லங்களை நாம் எடுத்துள் ளோம். அவற்றை அவர்களின் பெற்றோரிடம்கொடுக்க நாம் தயாராக உள்ளோம் எனவும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இந்தப் பன்னிரண்டு பேரில் மூவர் களுஆராய்ச்சி கொடித் துவக்கு (தேசிய அடையாள அட்டை எண். 661402156 V) கே. கே. குமாரசிங்க (படை அடையாள அட்டை எண் 73 697) கே. எம். கே. எஸ். பிறேமரட்ண (படை அடை யாள அட்டை எண் 67095) ஆகியோர் என அடையாளம் காணப்பட்டுள்ளது.

இவர்களின் சடலங்களை இவர்களின் பெற்றோரிடம் ஒப்படைக்க சிறிலங்கா தயங் கும் பட்சத்தில்இவர்களுடைய உடல்கள் எபமால் தகனம் செய்யப்படும் எனவும் தெரி விக்கப்பட்டுள்ளது.

## செஞ்சிலுவை வடிவ மின் விளக்கு

(மானிப்பாய்)

மானிப்பாயில் இயங்கும் யாழ். போதனா மருத்துவ மனையை சிறிலங்கா விமான ப்படையினருக்கு இனம்காட் டிக்கொள்வதற்கு செஞ்சிலு வை வடிவ மின்குமிழ்கள் பொருத்தப்பட்டுள்ளன.

இதுவரை காலமும் இப் பகு தியில் ரயர்களைப்போட்டு எரிப்பதன் மூலமே வைத்திய சாலை என அடையாளம் காட்டப்பட்டது. இந்த முறை யினால் இப்பகுதியில் சூழல் மாசுபடுவதனால்இந்த மாற்று நடவடிக்கை எடுக்கப்பட்டுள் ளது. (க)

**இழக்கு**

( 1 ஆம் பக்கத் தொடர்ச்சி)

மக்கள் கோலாகலமாக பேர் லினை அலங்கரித்துள்ளனர் எனத் தெரிகின்றது. இணைந்த ஜேர்மனியின் மொத்த சனத்தொகை சுமார் எட்டுக் கோடியாக இருக்கும். இரண்டாம் உலகப் போருக்கு பின் சுமார் 45 ஆண்டுகளுக்கு முன்பாக ஜேர்மனி கிழக்கு மேற்கு என இரண்டாகப் பிரிக்கப்பட்டது

இனி இவைகள் இணைக்கப் படுவதால் கிழக்கு ஜேர்மனி யூடாக பிரவேசித்து எல்லை யைக் கடக்க முயலும் பிற நாட்டு அகதிகள் பலத்த சிரமத்தை எதிர்நோக்க வேண்டியிருக்கலாம் எனக் கருதப்படுகிறது.

**கடலில்**

(1 ஆம் பக்கத் தொடர்ச்சி)

காணமுடியாத அளவுக்கு உருச்சிதைந்திருந்தது.

இப்பகுதியில் அதிரடிப் படையினரால் கைது செய்யப் பட்டவர்கள் கொலலப்பட்ட பின் அவர்களது தலைகளே இவ்வாறு கடலினுள் வீசப்பட் டிருக்கலாம் என நம்பப்படு கிறது. பாதுகாப்புப் படை யினரால் கைதானவர்கள் இவ் வாறு சடலங்களாக முன்னர் தென் இலங்கைப் பகுதியில் களனி கங்கையில் மிதந்து வந் தமையும் இங்கு குறிப்பிடத் தக்கது.

## மரண அறிவித்தல்

### அம்பலவாணர் ஆறுமுகம்

நீர்வேலி கரந்தன் சந்தியைச் சேர்ந்த அம்பலவாணர் ஆறுமுகம் அவர்கள் 02 - 10 - 90 அன்று சிவபதம் அடைந்துவிட்டார். அன்னார் காலஞ்சென்ற அம்பலவா ணர் தம்பதிகளின் அன்பு மகனும் காலம் சென்ற இளைய பிள்ளை அவர்களின் அன்புக் கணவரும் சிவபாக்கியம் சிவசுப்பிரமணியம் (ப. நோ. கூ. ச நீர்வேலி), சிவஞானம் சிவனேஸ்வரி, சிவபாதம், சிவலோகநாதன், சிவகுமார் ஆகியோரின் அன்புத்தந்தையும், காலஞ்சென்ற மார்க் கண்டு (தபால் திணைக்களம்), கந்தசாமி, சோதிலிங்கம், சந்திராதேவி, தெய்வமணி, பவளராணி ஆகியோரின் மாமனாரும், அன்னம்மா, குமாரசாமி, இராசையா (ஓய்வுபெற்ற பொலிஸ் உத்தியோகத்தர்), சண்முகம் (சிறுப்பிட்டி), இராசம்மா அப்புப்பிள்ளை, நடராசா (ஓய்வுபெற்ற இ. போ. ச.டிப்போ பரிசோதகர்) ஆகியோ ரின் சகோதரனும், கவியரசன் (தாய்வான்), கிருபாகரன் (சுவிஸ்), கருணாகரன், துஷ்யந்தி, யசோதா, ராதிகா, நிரஞ்ஜன், நளாயினி, தமயந்தி, சுபாசினி, கஜநேசன், தனுஜா, சிவசங்கர் ஆகியோரின் அன்புப் பேரனும் ஆவார். அன்னாரின் ஈமக்கிரியைகள் இன்று புதன் கிழமை பிற்பகல் 1 மணியளவில் அன்னாரின் இல்லத்தில் நடைபெற்று நீர்வேலி மயானத்தில் தகனம் செய்யப் படும். இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண் பர்கள் ஏற்றுக் கொள்ளவும்.

கரந்தன் சந்தி,
நீர்வேலி.
(R/697)

தகவல்:
பிள்ளைகள், மருமக்கள்,
சகோதரர்கள்.

இப்பத்திரிகை யாழ்ப்பாணம் வைமன் வீதி 31-ஆம் இலக் கத்திலுள்ள "ஈழநாதம்" பணிமனையில் 1990 ஆம் ஆண்டு அக்டோபர் மாதம் 03 ஆம் தேதி அச்சிட்டு வெளியிடப்பட்டது.